ஸாஸாரீஸா ; || பாதப பக மாபா ; ||
ம-ய — க்க-மும் || சாய்ந் — த - து . ||

தொடுப்பு போல் பாடவும்

; கொதித்த-லோ || காசாரக் || ; குதிப்பெலாம் ||
ஸ்ாஸ்நிதநிதபபா; ||
ஒழிந்தது . ||
; கொலையும் க || ளவு மற்றை ||
; புலை யும்-அ || ழிந்தது || (இது)

17. ஞானசரியை

ராகம் : தோடி **தாளம் : ஆதி**

(8-வது மேளம்)

ஆரோ : ஸரிகமபதநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

நானுரைக்கும் வார்த்தையெல்லாம் நாயகன்றன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள், நற்றருணம் இதுவே ||

வானுரைத்த மணிமன்றில் நடம்புரியெம் பெருமான்
வரவெதிர் கொண்ட வனருளால் வரங்களெல்லாம் பெறவே ||

தேனுரைக்கு முளமினிக்க வெழுகின்றே னீவீர்
தெரிந்தடைந்தென் னுடனெழுமின் சித்தி பெறலாகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினைநீர் தானடைதல் குறித்தே ||

எடுப்பு

; ஸாஸ்ரிஸ்ா ஸ்நிதபதநிஸ்ா — |
நா னு ரைக்கும் வார்த்தையெல்லாம் |
; தநீதபம | பா, தபமக மா || —
நா-யகன் | தன்-வார்த் தை || —
; , மாநிதா தமகரிஸாரிநி | ஸா,
நம்பு மி னோ-ந- ம ர ங் | காள்
ஸாரிகா | மா, ததாதம || தநி
நற்றரு | ணம் இது வே || — (நானுரைக்கும்)

தொடுப்பு

; தாதமாத நிநீ ஸ்ா , ஸ்ா |
வானுரைத்த மணி மன்றில் . |
; நிகாரிஸ்ா | ரிஸ்நி தநீஸ்ா ||
நடம் புரி | யெம்-பெருமான் ||
; த த க்ரிஸ்ா ஸ்நீதநீஸ்ா |
வரவெதிர்கொண்டவர்அருளால் |
; ஸ்ாரிஸ் நிதபா | மா ; கமபத || நிஸ்
வ ர ங் — களெ ல்லாம் பெறவே- || —

(நானுரைக்கும்)

முடிப்பு

; பாதபாப தபா தபா பா |
தேனுரைக்கு உளம் இனிக்க |
; மநீதபா | ; தபமகமா ||
எழுகின்றேன் . நீ — வீர் ||
; கமாநி தாமா மமகதமக | ரிஸ
தெரிந்தடைந்தென்னுடன் எழு— | மின்
ஸரீகமா | பதபதபா ; ||
சித்தி பெற | லா—கும் - ||
; தாதமாதா, நிநீஸ்ஸ்ா |
ஏனுரைத்தேன் . இரக்கத்தால் |
; நிக்ா ரிஸ்ா | ரிஸ்நிதநீஸ்ா ||
எடுத்துரைத் தேன்-கண்டீர் ||
; ததக்ரிஸ்ா ஸ்நீதநீஸ்ா | ; ஸ்ாரிஸ்நிதபாமா ;
யானடையும் சுகத்தினைநீர் | தா — —— னடைதல்
கமபத || நிஸ்
குறித்தே ||

(நானுரைக்கும்)

18. திருக்கதவந்திறத்தல்

ராகம் : பந்துவராளி — தாளம் : ரூபகம்

(51-வது மேளம்)

ஆரோ : ஸரிகமபதநிஸ் — அவரோ : ஸ்நிதபமகரிஸ

மணிக்கதவந் திறவாயோ மறப்பையெல்லாந் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னே நின் வடிவது காட்டாயோ ||

கணிக்கறியாப் பெருநிலையில் என்னோடு நீ கலந்தே
கரைகடந்த பெரும்போகங் கண்டிடச் செய்யாயோ ||

தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடியாதினியென் தனித்தலைமைப் பதியே
திணிக்கலை யாதியவெல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்திசிகா மணியேயென் திருநடநாயகனே ||

எடுப்பு

; ஸ்ஸாநிதாபா ; || ; பகா மா, பா ; ||
மணிக்கத வம் || திற வா யோ. ||
; மதமகரிகரிஸா ; || ; பாபாமபதபதா ||
மறப்பையெல்லாம் || தவிர்த்தே — — ||
; நிஸ்ாநிதாநிதபம || ; தமாதநீஸ்ா ; ||
மாற்றறியா — — || பொன்னே நின் ||
; ஸ்நிரிஸ்நிதபா ; || மதபமகமமரிகமபத || நீஸ்
வ - டி - வ - து || கா—ட்டா—யோ || —

(மணிக்கதவம்)

தொடுப்பு

; தநீதபமதா ; || ; நிஸ்ாதநீஸ்ா ; ||
கணிக்கறியா || பெரு நிலையில் ||
; ஸ்ாஸ்நிகரிஸ்ா ; || ஸ்ா ; ஸ்ந்ிரிஸ்நிதபம || பத
என்னோ——டு - || நீ கலந் — — — தே || —
; ஸ்ரீக்க்ிரிப்ம்க்ிரி || ஸ்ாகரிஸ்நிதா நீஸ்ா ||
கரைகடந்த... || பெரும் போ — கம் ||
; ஸ்நிரிஸநிதபா; || ததபமகமமரிகமபத || நிஸ்
கண்—டி—டச்- || செய் யா — யோ || —

(மணிக்கதவம்)

முடிப்பு

; தபாதபாதா ; || ; நிரிஸ்ாநிதா பா பா ||
தணிக்கறியா || கா—தல்—மி கப் ||
; பபாம காமாரீ || காநிததபபா ; ; ||
பெருகு கின்ற || த—ர—சே - - - ||
; தபமகமா, தநி || தநிஸ்ாரிஸ்நிதபமகரிகா ||
தாங்—க—முடி || யா ——— தினி எ-ன்- ||
; கநீதபமகரீ ; || கதபமகரீ., ஸா ; ||
தனித்தலைமைப் || ப-தி யே — — - ||
; தநீதபமதா ; || ஸ்ாஸ்த்நீ;ஸ்ா ; ||
திணிக்கலையா - || தி-ய-வெல்லாம் ||
; ஸ் ஸ்ாஸ் ஸ்நிக்ரிஸ்ா || ஸ்நிரிஸ்நிதபமதா ; ||
பணிக்க வல் — ல || சி வ—மே — — — ||
; ஸ்ரிக்ாக்ரிப்ம்க்ரி || ஸ்ாகரிஸ்நிதபதநிஸ்ா ||
சித்த சி—கா— || ம ணி – யே ... என்— ||
; நிஸ்ாநிதாபா ; || ததபமகமமரிகமபத || நிஸ்
திரு நட நா || ய-க-னே — — — — || —

(மணிக்கதவம்)

19. திருப்பள்ளியெழுச்சி

ராகம் : பௌளி — தாளம் : ஆதி

(51-வது மேளமான 'பந்துவராளி'யின் கிளை)

ஆரோ : ஸரிகபதஸ் — அவரோ : ஸ்நிதபகரிஸ

பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கியதெங்கும்— ||
தொழுது நிற்கின்றனன் செய்பணியெல்லாம்
சொல்லுதல் வேண்டுமென் வல்லசற்குருவே— ||
முழுதுமானுனென ஆகமவேத
முறைகளெலாம் மொழிகின்ற முன்னவனே
எழுதுதலரியசீர் அருட்பெருஞ்ஜோதி
என்தந்தையே பள்ளியெழுந்தருளாயே— ||

எடுப்பு

; கபாரிகா பா ; தாபா | ; , பாதபா | பாபாதநிதப ||
பொழுது விடிந்ததென் | உள்ளமென்கமலம் ...... ||
; கபாதபா பகதபகரிஸா | ; , ஸரிககா | பா ; தநிதப ||
பூத்தது பொன்னொளி | பொங்கிய தெங்கும் — ||
(பொழுது)

தொடுப்பு

; பகாபதா ஸ்ா ; 'ரீஸ்ா | ; ரிகாரிஸ்ா | ஸ்நிதாதநிதா || பா
தொழுதுநிற்கின்றனன் | செய்பணி எல் — லா — || ம்
; த'ரீஸ்ஸ்ாஸ்நிதநிதாபா | ; கபாதபா | பகதபகபகரி || ஸரி
சொல்லுதல்வேண்டுமென் | வல்லசற் கு-ரு-வே — || —
(பொழுது)

முடிப்பு

; ககாகா, ரிஸ ரீகாகாகா | ; கபாதபா | பகதபகரிஸா ||
முழுதும் ஆ - ஞன் என | ஆ—கம வே......த ||
; கபாகரீ ஸா ; ரிகரிஸத | நித்ஸரீகாக | பா, தபாபா ||
முறைகளெல் லா—ம் | மொழிகின்றமுன் னவனே ||

தொடுப்பு போல் பாடவும்

; எழுதுதற்கரிய சீர் | ; அருட்பெருஞ்ஜோதி ||
; என் தந்தையே-பள்ளி | ; எழுந்தருளாயே ||

(பொழுது)

20. உறுதி கூறல்

இராகம் : ஸ்ரீரஞ்ஜனி தாளம் : ரூபகம்)

(22-வது மேளமான "கரகரப்ரியா"வின் கிளை)

ஆரோ : ஸரிகமதநிஸ் அவரோ : ஸ்நிதமகரிஸ

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ||

ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்து அலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே ||

நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உண்மையே ||

எடுப்பு

ஸ்நிரிஸ்ாநிதாமா ;	||	; கமாகரீஸா ;	||
சா - - தி யி லே -	||	மதங்களிலே.	||
; ஸாமமகரிஸரிகா	||	மாகாமா ; ; ;	||
ச.ம—ய—நெறி	||	க ளி லே . . .	||
மகாமதாதா.நிதா	||	நீதாமதநிதநீ ;	||
சாத்திரச் சந்தடி	||	களிலே	||
நிஸாநிதா கமாதநீ	||	க்ரிஸ்நிரிஸ்நிததமதநி	||
கோத்திரச் சண்டையி	||	லே	||

(சா தியிலே)

தொடுப்பு

; தமாதநீஸா ; || ; ஸ்ரீக்ரிஸ்நிஸா·ரீ ||
ஆ-தி யிலே . || அ பி-மா—னித்து ||
; ஸா·ரீக்ாம்ாக்ா || ·ரீக்ா க்ரிரீ ; ; ||
அ லே கின்—ற || உல . கீ ர் - - - - ||
·ரீக்ாம்ா ஸா·ரீக்ா || நீ ஸா க்ரிஸ்நிதாநீ ||
அலேந்து அலேந்து || வீ-ணே ...... நீ.ர் ||
ஸ்நிரிஸ்நிநிதமாதநீ || ஸா·நீ ரிரிஸ்நிஸா ; ||
அ-ழி-தல்......அழ || க ல வே ... ... ||

(சாதியிலே)

முடிப்பு

; கமாநிதாதா; || ; மதாமதநிதாநீ ; ||
நீ — தி யி லே || . சன் - மா - ர்க்க ||
; நிஸா நிதாமா ; || ; ; ; தம கரி கா ||
நி லே த னிரிலே || . . . ஞா ... ன ||
; கமாநிதாமா ; || ; கமாகரீஸா ; ||
நிருத்தமிடும் . || . தனித்தலேவர் . ||
; ஸாரீஸா, ரிகா || மாகாமா ; ; ; ||
ஒருத்தர்—அவர் || தா-மே . . . ||

(தொடுப்புபோல் பாடவும்)

; வீதியிலே || ; அருள்ஜோதி || ; விளேயாடல் || புரிய ||
மேவுகின்ற || தருணம் இது ||
ஸ்நிரிஸ்நிதநிஸ்நிதமா || ; தநீஸ்நீஸா ; ||
கூ...வு - கி ன் றே ன் — || உமையே . . || (சாதியிலே

21. நெஞ்சொடு கிளத்தல்

ராகம் : கேதாரம் தாளம் : ஆதி

(29-வது மேளமான "சங்கராபரண"த்தின் கிளை)

ஆரோ: ஸமகமபநிஸ் அவரோ : ஸ்நிபமகரிஸ

அஞ்சாதே நெஞ்சே—நீ
அஞ்சாதே நெஞ்சே ||

வஞ்சமிலா நாம் வருந்திடலப்போதே
அஞ்சலென்பாரிதோ அம்பலத்திருக்கின்றார் ||

வன்பர் மனத்தை மதியாதவர் நமது
அன்பர் இதோதிரு அம்பலத்திருக்கின்றார்
தன்னை யொப்பார் சிற்சபை நடஞ் செய்கின்றார்
அன்னை யொப்பாரிதோ அம்பலத் திருக்கின்றார் ||

எடுப்பு

ஸ்ா, நிபா, ம கா ரி ஸா ;	ரிகா, ஸா ;	; ; கமகரி	‖
அஞ்—சா—தே—நெஞ்	சே ... ... நீ ...		‖
ஸ்ா ; பமகமபா ; பஸ்ாநி	ஸ்ா ; ; ;	கரிஸ்நிபமபநி	‖
அ ஞ் சா ... தே நெஞ் .	சே ... நீ		‖

(அஞ்சாதே)

தொடுப்பு

; பநிபமகமபா ஸ்நிஸ்ா ;	; ஸ்ம்ர்க்ரீ - ஸ்ாரிக்க்ஸ்ஸ்ா		‖
வ ஞ் - ச மில் லா—நாம்	வருந்திடில் அப்போ — தே		‖
;, ஸ்க்ரிஸ்ா ஸ்நிபா நீஸ்ா	; , ஸ்நிபபம	கரிஸமகமபநி	‖
அஞ்சல் என்பா-ரிதோ	அம்பலத் திருக்கின்றார்		‖

(அஞ்சாதே)

முடிப்பு

; காமாபா பாபாபா ;	பநீபா, மா	கா, மரீ கா	‖
வன் பர் மனத் தை	மதி யா தவ — ர் ந ம து		‖
; , கபமகாமககரிஸாஸா	; ஸாமகாம	பாஸ்நிபாபா	‖
அன்பரிதோ ... திரு	அம்பலத்தில், இருக்கின்ருர்		‖
; பநிபமகமபநிஸ்ா; ஸா	ஸ்ாஸ்ம்ாக்ரீ	ஸ்ாரிக்க்ஸ்ஸ்ா	‖
தன்-னே ஒப்பார் சிற்	ச பை - நடம், செய்கின்ருர்		‖
;. ஸ்க்ரிஸா ஸ்நிபா நீஸா	; . ஸ்நி பபம	கரிஸம கமபநி	‖
;, அன்னே ஒப் பா ரிதோ	; , அம்ப லத் திருக் கின்ருர்		‖

(அஞ்சாதே)

22. வருவார் அழைத்துவாடி

ராகம் : கரகரப்ரியா   தாளம் : மிச்ரசாபு

(22-வது மேளகர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ்   அவரோ : ஸ்நிதபமகரிஸ

வருவார் அழைத்துவாடி—வடலூர் வடதிசைக்கே
வந்தால் பெறலாம் நல்ல வரமே ||

திருவார்பொன் அம்பலத்தே செழிக்குங் குஞ்சித பாதர்
சிவசிதம்பர போதர் தெய்வச் சபாநாதர் ||

சிந்தைகளிக்கக் கண்டு சிவானந்த மதுவுண்டு
தெளிந்தோரெல்லாருந் தொண்டு செய்யப் பரிவு கொண்டு
இந்தவெளியில் நடம் இடத்துணிந்தீரே=அங்கே
இதைவிடப் பெருவெளி இருக்குதென்றால் இங்கே ||

எடுப்பு

; , நிதாபா ; ; மா || பாநித பம கரி கா, மா ||
வ ரு வார் — அ || ழை த் து ... வா ... ||
பா ; ; ; ; ; ; || ; ; மகப மகரிமகரிஸா ||
டி . . . . || வ-ட ... லூர் - ||
ரீ காமா பா;தா ; || மபாதநீ பாதநிஸ்ா ; ||
வ ட தி சைக் கே || வந்தால் பெறலாம் . ||
தநீநிதபமகரிஸரிகமப || தநிஸ்
நல்ல - வ - ர - மே — || ...   (வருவார்)

தொடுப்பு

; , மபாதா ; ; நிஸ் || நிநிபாநீதாநீஸ்ா ; ||
திரு வார் பொன் || ... அம்பலத்தே - ||
; , க்'ரீ ஸ்ா ; ; தநி || ஸ்ாஸ்ா ;ஸ்நிரிஸ்நீ ; ||
செழிக்கும் குஞ் || சி த — பா - - - தர் ||
; ; நீதா நீதா ; || தா தா ; பாதா பதநித || நீ ;
. . சிவ சி தம் . || ப ர . போ த ... || ர் .
நிதபா ; ; மா || பாநித பமகரிகஸ ரிகமப || தநிஸ்
தெய் வ ... ச || பா ... நா... த ... || ... ர்

(வருவார்)

முடிப்பு

: ; பா பா ; ; பா || தாதா ; பாதா பதநித || நீ ;
சிந்தை . . க || ளிக் கக் கண் - டு ... || ...
தாநிதஸ்நிதபபா || பா, மபாநிதநிதபமகரி || கா,
சி - வா னந் - || த மது வுண் - - டு... || —
நிதாபா ; ; மப || தாநிதபமகாபமகரிரிகஸா ||
தெளிந்தோர்-ஆ- || யி — — — னும்தொண்டு – ||
; ; ரிகமா ; ; பா || தாதா ; பத நிரிஸ்ா நிதபா ||
செய்யப் ... ப || ரி வு - கொ ண் - டு - - - ||
; ; மபதா ; ; நிஸ் || நிநிபதநீ ; ஸ்ா ஸ்ா ; ||
இந்த . . வெ || ளி— யில் ந டம். ||
; ; க்ா 'ரீ ஸ்ாஸ்ா; || ஸ்ா. ஸ்ா, ஸ்நிரிஸ் நீ ; ||
இடத் துணிந் || தீ—ரே - ஐ — யா . ||
; ; நீதா நீதா ; || ; ; தாதாதா பதநித || நீ ;
. . இ தைவிடப் || . . . பெ ரு வெ ளி... ||
நிதாபா ; ; மா || பாநிதபமகரிகஸ ரிகமப || தநிஸ்
இருக்கு . . தென் || ரு ......ல் இங் ... கே... || ... ...

(வருவார்)

23. பரசிவ வணக்கம்

ராகம் : ராமப்ரியா **தாளம் : ரூபகம்**

(52 வது மேளம்)

ஆரோ : ஸரிகமபதநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞானநிலை விளங்கச் சிவானுபவம் விளங்கத் ||

தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கவொளி சிறந்ததிரு விளக்கே ||

உருவிளங்க வுயிர்விளங்க வுணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கவருளுதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொரு பால்விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே ||

எடுப்பு

; நிஸ்ாநிதாபா ; || பதநிதபமகரிகரிஸா ||
தி ரு-விளங்க || சி·வ-போ - - - - -க ||
; , ஸாரிகாககமரி || கா மா பா ; ; ; ||
சித்தியெல்லாம் || வி ள ங் க . . . ||
; மபாதநீதபதா || ; பதாநிஸ்ா ; ஸ்ா ||
சி வ ஞா — ன || நி லை வி ள ங்.க ||
ஸ்ரிக்ம்ப்ம்க்ா'ரீஸ்ா || ஸ்நிரிஸ் நிதபமகரிகம || பத
சி-வா- -னு பவம் || வி—ளங்—க - . . . . || —
(திருவிளங்க)

தொடுப்பு

; பதாநி நித தாபம || பாதப தாநீஸ்ா ; ||
தெரு விளங் — கு || திருத் தில்-லைத் ||
; ஸ்ா 'ரீ க்ா க்ா ; || கரிபமகரிக்ரிஸ்ா ; ||
திருச் சிற்றம் || ப-லத்தே — — . ||
; ஸ்ா 'ரீஸ்ா; ஸ்ா || ஸ்ஸ்நிதநிபதநிஸ்ா ; ||
தி ருக் கூத் து || விளங் க—ஒ—ளி ||
ஸ்நிக்ரிஸ்ாஸ்ஸ்நிதபம || பதநிஸ்நிதபமகரிகம || பத
சி-றந்த தி—ரு - - - - || வி ளக் கே - - - - - - || —

(திருவிளங்க)

முடிப்பு

; ததாநிதா ; தா || ; பதாநிநிததாபா ||
உரு விளங் க || - உயிர் விளங் . க ||
; பதாப பம கரிஸரி || கா மா பா ; ; ; ||
உணர்ச்சி அ-து - . || வி ள ங் க . . . ||
; கமாபதாநீஸ்ா || ஸ்நிரிஸ்நிததாபா ||
உல க மெல்-லாம் || வி—ளங் - - - - க. ||
; பதாநிதாபமகரி || ஸாரீ கதபம கரீ ஸா ||
அரு ளு த வு - - - || பெரும் தா—யா-ம் . ||
; பதாநி தா பா, ம || பாதப தா நீ ஸ்ா ; ||
ம ரு வி ளங் க — || குழல் வல்—லி . ||
; ஸ்'ரீக்'ரீக்ா ; || க்ரிப்மக்ரி க்ரி ஸ்ா ; ||
மகிழ்ந்தொருபால் || விளங் — — — க . ||
; ஸ்ஸ்ாரிஸ்ா ஸ்ா ; || ஸ்ஸ்நிதநிபதநிஸ்ா ; ||
வயங்கு ம ணி . || பொ-து-வி-ளங்—க . ||
ஸ்நிக்ரிஸ்ா ஸ்ஸ்நிதபம || பதநிஸ்நிதபமகரிகம || பத
வ-ளர்ந்த சி—வ—க் || கொழுந்தே ... . || ...

(திருவிளங்க)

24. பரமவசிவ நிலை

ராகம் : ஆனந்தபைரவி   தாளம் : ரூபகம்

(20-வது மேளமான ' நடபைரவி''யின் கிளை)

ஆரோ ; ஸகரிகமபதபஸ்   அவரோ : ஸ்நிதபமகரிஸ

அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம் ||

பொருட்சாரும் மறைகளெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்ததெய்வம் உயர் நாதாந்தத் தெய்வம் ||

இருட்பாடுநீக்கி யொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணிய நானெண்ணி வாறெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் ||

எடுப்பு

பா பா மதபம கரி ஸா || நிஸ கரி ஸா ; ஸரிரிஸ || நீ
அ ருட் ஜோ — தி - - || தெய் - - வம்-என்னை || —
; நிஸாம பம கா ரீ || கா மா பா ; : ; ||
ஆண்டு கொண்ட || தெய் வம் . . . ||
நிபமா பா-ரீ ஸ்ா ; || ஸ்நிரிஸ்நிதபா ; மா ||
அம்...பலத்தே — || ஆ—டு— கின்—ற ||
; கமாபாநிநிபாம || கமபாநிப மாபம கரிநிஸகம ||
ஆ—னந்—த - - || தெய்—வம் ... ... ||

(அருட்ஜோதி)

தொடுப்பு

; ஸ ஸா ஸ்ா, ரிஸ்நீ || ; நிஸ்ாக்·ரீ ஸ்ா ; ||
பொருட் சா ரும் || . மறைகளெல்லாம் ||
; நிஸ்ாம்க்ரிஸ்ா ஸ்ா || ஸ்நி·நீஸ்ரிஸ்ஸா ; ||
போற்று கின்—ற || தெய்—வம் - - - ||
; பா, ரிக்ரி ஸ்ா ; || ஸ்நிரிஸ் நிதபா பநிநிப || மா
போ-தாந் த — || தெய்—வம் — உயர் || —
கமாபாநிநிபாம || கமபாதப கமபமகரி நிஸகம ||
நா-தாந்த —— || தெய் —— வம் ... ...

(அருட்ஜோதி)

முடிப்பு

; கரீஸா, ஸா ; || நிஸகரிஸா ; ஸரிரிஸ || நீ
இருட்பா, டு - || நீ - - க்கி —·ஓ — ளி || —
நிஸாமமா பமகரி || கமபா மா மா ; ; ||
ஈந்—த ரு ளும்... || தெய் — வம் . . ||
; கமாபபா பா ; || பநிஸ்ாரிஸ் நிதபா பமகா || ரீ
எண்ணிய நான் || எண் ——— ணி-ய வா— || று
கமாபமாபமகரி || ஸ்ா ; ரிகாஸஸா ; ||
எனக் கரு ளும் — || தெய் வம் - - - - ||

(தொடுப்புபோல் பாடவும்)

; தெருட்பாடல் || ; உவந்தெனையும் ||
; சிவ மாக்கும் || தெய்வம் ||
; சிற்சபையில் || விளங்குகின்ற ||
; தெய்வமதே || தெய்வம் ||

(அருட்ஜோதி)

25. சற்குருமணி மாலை

ராகம் : அமிர்தவர்ஷிணி **தாளம் : ஆதி**

(66-வது மேளமான "சித்ராம்பரி"யின் கிளை)

ஆரோ : ஸகமபநிஸ் அவரோ : ஸ்நிபமகஸ

காய்மனக் கடையேனைக் காத்தமெய்ப் பொருளே
கலைகளும் கருதரும் ஒருபெரும் பதியே ||

தேய்மதிச் சமயருக் கரியவொண் சுடரே
சித்தெலாம் வல்லதோர் சத்திய முதலே ||

ஆய்மதிப்பெரியருள் அமர்ந்த சிற்பரமே
அம்பலத் தாடல்செய் செம்பதத் தரசே
தாய்மதிப் பரியதோர் தயவுடைச் சிவமே
தனிநடராஜவென் சற்குரு மணியே ||

எடுப்பு

; நிஸ்ாநிபா பபமகமக ஸா | ;நிஸாகமா | பாமாபா ; ||
காய் மனக்கடையே...னை | . காத்த மெய்ப்பொருளே - ||
; மகாமபா ; நிபாநிஸ்ா | ; ஸ்கா்நிஸ்ா | பநிமபகமபநி || ஸ்க்
- கலைகளும் . கரு தரும் | . ஒரு பெரும், ப-தி-யே —— || —
(காய்மனக்)

தொடுப்பு

1. ; மகாமபா நிஸ்ா நிபாமா | ; பஸ்ாநிபா | ஸ்ா நீஸ்ா ; ||
தேய் மதிச்சம ய ருக்கு | . அரியவொண் சுடரே ॰ ||

2. ; நிபமகாமபாநிஸ்ாநிபாநிப | பமபஸ்ாநிபநி | ஸ்ாக்ஸ்கா; ||
- தே-ய்ம திச்சம ய ருக்கு— | — அரியவொண், சுட ரே— ||
; , க்ம்க்ஸ்ாஸ்நிபாநீஸ்ா | ; , பாநிபா | பமகஸகமபநி || ஸ்க்
. . சித்தெலாம் வல் லதோர் | . . சத்திய மு-த-லே...... || —
(காய்மனக்)

முடிப்பு

; , பாபபா பாபம பாபா | ; பஸ்ாநிபா | பமகம கா; ||
— ஆய்மதிப் பெரி யருள் | . அமர்ந்தசிற். ப-ர-மே - ||
; , காநிபாபமககமகஸா | ; நிஸாகமா | பாஸ்நிபா; ||
— அம்பலத்தா.. டல்செய் | - செம் பதத் தர—சே - ||

தொடுப்புபோல் பாடவும்

; தாய் மதிப்பரியதோர் | ; தயவுடைச்சிவமே ||
; தனிநடராஜவென் | , , சற்குரு மணியே ||
(காய்மனக்)

26. நடேசர் கீர்த்தனை

ராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

(29-வது மேள கர்த்தா) (திச்ரகதி)

ஆரோ : ஸரிகமபதநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

தெண்டனிட்டேனென்று சொல்லடி—என்சுவாமிக்குநான்
தெண்டனிட்டேனென்று சொல்லடி—தோழி ||

தண்டலை விளங்கும் தில்லைத் தலத்தே பொன்னம்பலத்தே
கண்டவர் மயங்க வேடம் கட்டியாடுகின்றவர்க்கு ||

தாய்வயற்றில் பிறவாது தானே முளைத்தவர்க்கு
சாதிகுலமறியாது தாண்டவம் செய்கின்றவர்க்கு
ஏயதொழில் அருளும் என்பிராண நாயகர்க்கு
ஏமாந்த வரையெல்லாம் ஏமாற்றும் ஈசருக்கு ||

எடுப்பு

ஸ்ா ; பாமா காமா பா ; பா தா ; நீ | ஸ்ா ; ; ; ; ஸ்ா |
தெண் டனிட் டேன் என்று சொல்ல | டி-- --என் |
ஸ்நிதா பாபம பமகரி ||
சு வா மிக்கு நா ன் ||

காமா ஸ்நிதாபா மாக்ாமாரீ கா மாதப |
தண்-ட-னிட்டேன் என்-று — சொல்ல |
ரீ ; ஸ்ா ; ; ; | கமபதநித பமகரிஸ்நி ||
டி .... தோ ...... ழி ...... ||

(தண்டனிட்டேன்)

தொடுப்பு

பா,ததபம கா,மா பதநீ ; ஸ்ாஸ்ா ; |
தண்டலை விளங்கும் தில்லைத் |
ஸ்ா ஸ்ா 'ரீ ஸ்ா ; ஸ்ா | ஸ்ா ; தாநீஸ்ா ; ||
தலத்தில் — — பொன்னம்-பலத்தே - ||
ஸ்ா ; ரீ நீ ; ஸ்ா தா ; நீ பா ; தா |
கண் - ட வர் - ம யங் . க வே டம் |
ஸ்ா; நீ தபா ; மா | கா ; ரீ மாகாரீ ||
கட்டி ஆ - டு . கின் . ற வர்க்குத் ||

(தண்டனிட்டேன்)

முடிப்பு

கா ; மா பாபா ; பாபா பா,ததபமா |
தாய் வயிற்றில் பிற — வா . து — |
; ; பாஸ்நிதபா ; | காமாதப மகமாரீ ||
தா - . னே . | மு ளைத்த வர்க்கு - ||
கா ; மா தாபாமா காம பகா ரீஸா ; |
ஜா-தி கு லம் — — அ றி - யா - து - |
; ; பாமாகாமா | பா ; பா பா பா ; ||
தாண்டவம் செய் கின்ற . வர்க்கு. ||
; ; பாதப மகமா பா ; தாநீ ஸ்ா |
ஏ — ய தொழில் அரு ளும் - |
ஸ்ா 'நீ ஸ்ா ; ரீ ஸ்ா ஸ்ா ; தாநீ ஸ்ா ; ||
என் - ப்ரா - ண நா ; ய கர்க்கு - ||
ஸ்ா நீ ஸ்ா ; ரீ ஸ்ா ஸ்நிதாபா பதநீ ; |
ஏ —— மா —— ந்த வ-ரை- எல் லாம். |
ஸ்ா, ரி ஸ்நிதாபா, மகாமாதப கரிஸாநீ ||
ஏ —— மா —— ற்றும் ஈ ச — ருக்குத் ||

(தண்டனிட்டேன்)

27. அருள் விளக்க மாலை

ராகம் : ஆபோகி   தாளம் : ரூபகம்

(22-வது மேளமான "கரகரப்ரியா"வின் கிளை)

ஆரோ : ஸரிகமதஸ்   அவரோ : ஸ்தமகரிஸ

அருள்விளக்கே அருட்சுடரே அருள்ஜோதிச் சிவமே
அருளமுதே அருள்நிறைவே அருள் வடிவப்பொருளே ||

இருள்கடிந்தென் உளம்முழுதும் இடங்கொண்ட பதியே
என்னறிவே என்னுயிரே எனக்கினிய உறவே ||

மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில் நடம்புரிகின்ற மணவாளா எனக்கே
தெருளளித்தத் திருவாளா ஞான வுருவாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழியேற்றருளே ||

எடுப்பு

; தஸ்ாததாமா ; || ; கமாகரீ ஸா ; ||
அருள் விளக்கே - || - அருட்சுடரே- ||
; ஸாரிக ரிஸதாஸா || ரீகாமாகா மா ; ||
அருட்ஜோ-தி || சி வ மே - - - ||
; மமாகமாதா ; || ; ததா மதாஸ்ா ; ||
அரு ளமு தே - || - அருள் நிறைவே - ||
; தஸ்ாரிகாக்ரிரிஸ் || மதரிஸ் ஸ்ததம கரிஸரி || கம
- அருள் வடிவப் || பொருளே .... || —

(அருள்விளக்கே)

தொடுப்பு

; தஸ்ாமதாஸ்ா ; || ; தஸ்ாரிக்ாக்ரி·ரீ ||
- இருள் கடிந்தென் || - உளம் முழுதும்... ||
; ஸ்ா·ரீகாமாக்ா || ·ரீக்ாக்ரி·ரீ ; ; ||
இடம் கொண்ட || பதியே . . . ||
·ரீகாம்ாக்ரிக்ா ; || ஸ்ா·ரீக்கரிஸ·ரீ ; ||
என் ன றி வே . || என்-னு-யி-ரே — ||
தாஸ்ாக்ரிரிஸ்தமதா || க்ரிரிஸ் ஸ்ததம கரிஸரி || கம
என க்கி-னி-ய . . . . || உ-ற வே .... || —

(அருள்விளக்கே)

முடிப்பு

; ததாமதா ; தா || மாதாதரிரிஸ்தா ; ||
மருள் கடிந் த || மா-ம-ணி-யே - ||
; தரிஸ்ஸ்ாததாமா ; || மமகரிஸாரிகமா ; ||
மா ... ற்ற றி யாப் || பொன் — னே ... ||
; கமாதஸ்ாதாமா || மரிகா கரி ரீ ஸா ; ||
மன்றில் நடம் || பு - ரி கின் - ற - ||
; ஸரீக ரிஸதா ஸா ; || ரிகாமதாமா ; ||
- மண வா — ளா - || - எனக்கே - - - ||

(தொடுப்புபோல் பாடவும்)

; தெருளளித்த || ; திருவாளா ||
; ஞான-உரு || வா ளா ||
·ரீக்ாம்ா ; க்ா·ரீ || ஸ்ா·ரீக்க்ரிஸ்·ரீ ; ||
தெய்வ . நடத் || த ர சே — நான்; ||
செய்மொழி ஏற் || றருளே — — — ||

(அருள்விளக்கே)

28. தனிப்பாடல்

ராகம் : ஏதுகுலகாம்போதி **தாளம் : கண்டசாபு**

(28-வது மேளமான ''ஹரிகாம்போதி''யின் கிளை)

ஆரோ : ஸரிமபதஸ் அவரோ : ஸ்தபமகஸரிமகஸ

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங்கேட்பீர் ||

என்மார்க்கத் தென்னை உமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
எல்லாம்செய் வல்ல நமது இறைவனையே தொழுவீர் ||

புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சகமாய்த்
தன்மார்க்கமாய் விளங்கும் சுத்தசிவம் ஒன்றே
தன்னாணை என்னாணைச் சார்ந்தறிமின் ஈண்டே ||

எடுப்பு

; ஸபமபாமகா || கா ; காமபமக ||
சன்மார்க்க || சங் கத்தீர் ... ||
; காகரிகாமப || மக கரிம கரிஸா ; ||
சிற்ற-டி யே- || ன் உ—ம—து — ||
; ஸாரிக ஸ்ாஸா || ஸாரீகஸாரீ ||
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் ||
; மபா தஸ்பாபா || தபமக ரிபமக ரீமக || கரி
தய-வி-னொடும் || கே ட் பீ ... ... || -ர்

(சன்மார்க)

தொடுப்பு

1. ; பதபப மகபா || தாஸ்ா ஸ்ா ஸ்ாஸ்ா ||
என் மார்க்கத் || தெனே உமக்குள் ||
; தஸ்ாநிதாதா || பதாஸ்நிதாபா ; ||
ஒருவனெனக் || கொள்வீ - ர் - . ||

2. ; பநிதபமகா பா || தாஸ்ா பதஸ்ாஸ்ா ||
என் மார்க்கத் || தெனே உமக் குள் ||
; ஸ்ரிக்ாம்க்ரிஸ்ஸ்ா || தஸ்ரிஸ் தஸ்நிததா || பா
ஒருவ னெனக் || கொள்வீ — — — || ர்
; ஸரிமா ; மா || காமாபா. மபா || தா
எல் லாம் செய் || வல்-ல- — நம || து
; பதாஸ் தபபா || தபமகரிப மகரீமக || கரி
இறைவனேயே || தொ-ழு வீ ...... || ர்

(சன்மார்க)

முடிப்பு

; மகரிஸா ; ரீ || காரீ பாமா கா ||
புன் மார்க்கத் || தவர் போ—லே ||
; ரிகாம பாபம || காகரிரிகமகரிக || ,ரி
வே—று சி ல— || புகன்றே ... ... || ...
; ஸரிகாமக ரிஸஸா || ஸாஸநி ஸரிகஸரீ ||
புந்தி—மயக் || க டை யா-தீர். ||
; ஸரீ மமா மா || மாகா மா பா ; ||
பூ ரண மெய்ச் || செக மாய் . ||

(தொடுப்புபோல் பாடவும்)

; தன் மார்க்க || மாய் விளங்கும் ||
; சுத்த சிவம் || ஒன்றே ||
; தன்னுணே || என்னுணே ||
; சார்ந்தறிமின் || ஈண்டே ||

(சன்மார்க)

29. பரசிவ நிலை

ராகம் : கீர்வாணி | தாளம் : ரூபகம்

(21-வது மேள கர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ் | அவரோ : ஸ்நிதபமகரிஸ

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிகரில்லாதத் தனித்தலைமைத் தெய்வம் ||

வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம் ||

காயாது கனியாகிக் கலந்தினிக்கும் தெய்வம்
கருணைநிதித் தெய்வம்முற்றும் காட்டுவிக்கும் தெய்வம்
சேயாகவெனை வளர்க்குந் தெய்வம் மகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் ||

எடுப்பு

ஸ்ா ; ஸ்நிதா பா ; || மகபம காரீஸா ; ||
தா . யா ... கித் || தந் ... தையுமாய்த் ||
; ஸகாரி ஸாநீஸா || ரிகரிகரீ ; ; ; ||
தாங்கு கின் ற || தெய்வம் ... ||
; ரீகாமா, பதா || நீதாநீ;ஸ்ா ; ||
தன் னை, நிக || ரில்-லா-த - ||
தா ரீ ஸ்நிதாபா ; || தபமகரிஸ ரிகமபதநி ||
த னித்த-லை மை - || தெ-ய்— வம் — — || (தாயாகி)

தொடுப்பு

; பதாநீ, ஸ்ா ; || க்ரிஸ்நிஸ்ாரிக்'ரீ ; ||
வா-யா ர - || வாழ்த்து கின்றோர். ||
; ஸ்'ரீக்ம்ா ; க்ா || 'ரீக்ாக்ரிரீ ; ; ||
மனத்தமர்ந்த || தெய் வம் . . ||
; ரிக்ாம்க்ா 'ரீ ; || நிரிக்ரிநிதநிரி'ரீ ; ||
மல ரடி யென் || சென்-னி-மி-சை- ||
தநி'ரீக்ரிஸ்நிதபமா ; || மபதப மகரிஸ ரிகமபதநி ||
வைத்-த-பெ-ரும் — || தெ ய் .... வம் ...... ||

(தாயாகி)

முடிப்பு

; பா, பா, பா ; || ; மாபதபமகா ரீ ; ||
கா . யா . து. || க னி யா— கிக் . ||
; ரிகா மமகரிஸா || ரீகாமபமகமா ; ||
கலந்தினிக்கும் - || தெய்வம் — — ||
; ரிகாம பாதா ; || நிஸ'ரீக்ரிஸ்நிதாபாமா ||
கருணைநிதி - || தெய் - வம் - முற்றும் ||
; கதாப மகரீ காமா || பதபத மாபா ; ; ||
காட்டுவிக்-கும் — || தெய்—வம் - - - ||

(தொடுப்புபோல் பாடவும்)

; சேயாகி || எனைவளர்க்கும் || ; தெய்வமகா || தெய்வம் ||
; சிற்சபையில் || விளங்குகின்ற || தெய்வமதே || தெய்வம் ||

(தாயாகி)

30. புண்ணியம்

ராகம் : கேதாரகௌளை | தாளம் : ஆதி

(28-வது மேளமான "ஹரிகாம்போதி"யின் கிளை)

ஆரோ : ஸரிமபநிஸ் | அவரோ : ஸ்நிதபமகரிஸ

என்னபுண்ணியம் செய்தேனோ—அம்மாநான்
என்ன புண்ணியம் செய்தேனோ ||

மன்னர் நாதர் அம்பலவர் வந்தார் வந்தார் என்று திருச்
சின்ன நாதம் என்னிரண்டு செவிகளினுட் சொல்கின்றதே ||

பாகார் மொழியாள்சிவ மாகாம வல்லிநாளும்
பார்த்தாட மணிமன்றில் கூத்தாடுகின்ற சித்தர்
வாகாய் உனக்கேயென்றும் சாகாவரம் கொடுக்க
வலிய வந்தார் வந்தார் என்றே வலிய நாதம் சொல்கின்றதே ||

எடுப்பு

ˑரீ, ஸா, ஸா ஸ்நிரிஸ் நிதபம |
என்ன புண்ணி...யம்-செய் |
பாநீஸா ; ! ; ; பநிஸ்ரி ||
தே - னோ ... நா ... ன் ||

மகாரிஸா , ˑரீ நிஸ்ரிஸ் நிதபாநிம |
என்ன — புண்ணி — — யம்.செய் |
பநீஸா. தப | மகரிமபநிஸ்ரி ||
தே-னோ அம்மா ... நான் || (என்ன)

தொடுப்பு

1. ; பநிமபாநிஸ்'ரீரி·ரீ ரீ | ·ரீ,மக்ரிரீ | மக்ரிஸா,ஸா ||
மன்னர் நாதர் அம்பலவர் | வந்தார் வந் தா-ரென்று ||

2· ; ஸ்ரிரிஸ் நிதபாப நீஸ்'ரீரீ | ரீ,ப்மக்க்ரி | மக்ரிஸாஸாஸ் ||
மன்னர்நாதர் அம்-பலவர் | வந்தார் வந் தா-ரென்று-தி ||
ஸா நீஸ்'ரீஸ்நீ,தபாநீ | ஸ்ரிஸ்ாநிதாபா | மகரிமபநிஸ்ரி ||
ருச் சின்னநாதம்என்னிரண்டு | செவிகளினுட் சொல்கின்றதே ||
(என்ன)

முடிப்பு

பா,பா,பாபாபா,பநீ | ஸ்ரிநிஸ்ா நிதபாபா | பததபமகரீரீ ||
பாகார் மொழியாள்சிவ | மா—கா—ம —, வல் லி நாளும் ||
ரீ, பமககரி மகா ரிஸா,ஸா | ரீ, பமகரிம | பா, பபாபா ||
பார்த்தாட-மணி.மன்.றில் | கூத்தாடு கின்ற சித்தர் ||
ஸ்ரிஸ்நிதப பநிஸ்ா 'ரீ'ரீ'ரீ | ரீ,ப்மக்க்ரீ | ரீ, மக்ஸ்ாஸ்ா ||
வா-காய்-எனக்கே என்றும் | சாகாவர | ம் கொடுக்க ||
, நிஸ்ரிஸ்ாஸ்ாரிஸ்நிதபநிஸ்ா | ,ஸ்ரிஸ்நிதபா | மகரிமபநிஸ்ரி ||
,வலியவந்தார்வந்தார்என்றே ;வலியநாதம்சொல்-கின்றதே ||
(என்ன

31. அருள் விளக்கமாலை

ராகம்: தர்மவதி   தாளம்: கண்டசாபு

(59-வது மேளகர்த்தா)

ஆரோ: ஸரிகமபதநிஸ்   அவரோ: ஸ்நிதபமகரிஸ

கையாத தீங்கனியே கயக்காத அமுதே
கரையாத கற்கண்டே புரையாத கரும்பே ||

பொய்யாத பெருவாழ்வே புகையாத கனலே
போகாத புனலே உள் வேகாத காலே ||

கொய்யாத நறுமலரே கோவாத மணியே
குளியாத பெருமுத்தே ஒளியாத வெளியே
செய்யாத பேருதவி செய்த பெருந்தகையே
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழியேற்றருளே ||

எடுப்பு

; ஸ்ா ஸ்ஸ்நிதபம || நிதபம காரீஸா ||
கையா — த - || தீங்—க னி யே ||
; கரீஸநீஸா || ரிகரிக ரீ ; ; ||
கயக்கா-த || அ-மு-தே ... ||
; ரிகா மா, பா || ; தபாதநீஸ்ா ||
கரையா-த || . கற் கண் டே ||
; ஸ்ரிக்ரி ஸ்நிதாபம || கரிஸாரிகமபதநி || ஸ்ரி
பு-ரை யா — த - || க-ரும்-பே ...... || ...

(கையாத)

தொடுப்பு

; ஸாதநீ, ஸ்ா || ; நிஸ்ா ரிக்ரிக்ரி ||
. பொய்யாத || - பெரு வாழ்வே ||
: ஸ் ·ரீக்மாக்ா || ·ரீக்ா க்ரி ரீ ; ||
புகையா-த || க ன லே ... ||
; ஸ் ரீ ஸ்ரி க்ா·ரீ || ஸ்நிரிஸ்க்ரிஸநிதப || தநி
போ - கா - த || பு - ன-லே ...... || உள்
ஸ்ா, ரிஸ்நிதாபம || கரிரிஸ ரிகமபதநி || ஸ்ரி
வே—கா—த - || கா ... லே ..... || —

(கையாத)

முடிப்பு

; பா பா ; மா || பாபாதநிதபபா பம ||
கொய்யா-த || ந று ம — ல—ரே ||
; பதாநீஸ்நிதபா || பமநித பம காரீ ||
கோவா — த || ம-ணி-யே — — ||
; கதா பா, பம || கதபம காரீஸா ||
குளியாத — || பெ-ரும்-முத்தே ||
; ஸரீகமாபா || பதநிரிஸ்ஸ்நிதபா ; ||
ஒளியா—த || வெ ளி ... ... யே . ||

தொடுப்புபோல் பாடவும்

; செய்யாத || ; பேருதவி || ; செய்தபெருந் || தகையே ||
; ஸ்·ரீக் ரீஸ்ா || ஸ்நிரிஸ் க்ரிஸ்நிதப || தநி
தெய்வநடத் || த ர-சே- ... ... || என்
ஸநீதபாபம || கரிரிஸ ரிகமபதநி || ஸ்ரி
சிறு மொழிஏற் || ற ரு-ளே ...... || —

(கையாத)

32. அருள் விளக்கமாலை

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி

(28-வது மேளமான "ஹரிகாம்போதி"யின் கிளை)

ஆரோ : ஸரிகபதஸ் அவரோ : ஸ்தபகரிஸ

கைக்கிசைந்த பொருளேஎன் கருத்திசைந்த கனிவே
கண்ணேஎன் கண்களுக்கே கலந்திசைந்த கணவா ||

மெய்க்கிசைந்த அணியேபொன் மேடையிலென்னுடனே
மெய்கலந்த தருணத்தே விளைந்தபெருஞ் சுகமே ||

நெய்க்கிசைந்த உணவேஎன் நெறிக்கிசைந்த நிலையே
நித்தியமே எல்லாமாம் சத்தியமே உலகில்
பொய்க்கிசைந்தார் காணாதே பொதுநடஞ்செய் அரசே
புன்மொழியென்றிகழாதே புனைந்து மகிழ்ந்தருளே ||

எடுப்பு

; ஸ்ாரிஸ்ாஸ்தரிஸ்ாதா,பா | கபாதரிஸ்தப | பகதபகரிஸா ||
கைக்கிசைந்தபொருளேஎன் | கருத்திசைந்த.க னி.வே — ||
ரிகாரிஸா, ரீரிபாககாகா | கபாதரிஸ்தப | தபகரிகபதஸ் || ரிக்
கண்ணே-என்கண்களுக்கே | கலந்திசைந்த கண வா ... || ...
(கைக்கிசைந்த)

தொடுப்பு

; க்ாக்க்ாக் ரிஸ்ாரிக்ாக்ா | ; ரிக்ாரிஸ்ா | ரிஸ்ஸ்தாஸ்க்ரிரீ ||
மெய்க்கிசைந்த அணியே பொன் | மேடையில்என்-னுடனே ||
; தாக் ரீஸ்தரிஸ்ாதபாதா | கபாதரிஸ்தப | தபகரிஸரிகப || தரி
மெய்கலந்த த ரு ணத்தே | விளைந்தபெரும் சுக-மே... || —
(கைக்கிசைந்த)

முடிப்பு

; தாததாத.பகாபஸ்ததா | கபாதரிஸ்தப | ா,கதபாகரிகா ||
நெய்க்கிசைந்த.உணவே...என் | நெறிக்கிசைந்த | நிலையே- ||
; கஸ்ாதபாபகபாதப கரிஸா | ; , காரிகா | பதாஸ்தபாதா ||
நித்தியமே எல்லா...மாம் | ; சத்திய | மே-உல-கில் ||

தொடுப்புபோல பாடவும்

; பொய்க்கிசைந்தார் காணாதே | ; பொதுநடம்செய் அரசே ||
; புன்மொழி என்றிகழாதே | புனைந்து மகிழ்ந்தருளே ||
(கைக்கிசைந்த)

33. அருள் விளக்கமாலை

ராகம் : ரீதிகௌளை **தாளம் : ரூபகம்**

(22-வது மேளமான ''கரஹரப்ரியா''வின் கிளை)

ஆரோ : ஸகரிகமநிநிதமநிநிஸ்

அவரோ : ஸ்நிதமகமபமகரிஸநிபநிஸ்

கொடுத்திடநான் எடுத்திடவும் குறையாத நிதியே
கொல்லாதநெறியே சித் தெல்லாம்செய் பதியே ||

மடுத்திடவும் அடுத்தடுத்தே மடுப்பதற்குள் ஆசை
வைப்பதன்றி வெறுப்பறியா வண்ணநிறை அமுதே ||

எடுத்தெடுத்துப் புகன்றாலும் உலவாத ஒளியே
என்னுயிரே என்னுயிருக் கிசைந்த பெருந்துணையே
தடுத்திடவல் லவர் இல்லாத் தனிமுதல் பேரரசே
தாழ்மொழியென் றிகழாதே தரித்து மகிழ்ந்தருளே ||

எடுப்பு

; நிஸ்ாநிதாமா ; || ; கமாகரீ ஸா ; ||
. கொடுத்திடநான் || . எடுத்திடவும். ||
; ஸகரீ ஸநிபாநீ ; || ஸா ஸா ரிகா, ஸா ; ||
. குறை யா - த . || நி தி யே - - — - — ||
; ஸா பமகரி காமா || நீநீஸ்ா ; ; ஸ்ா ||
. கொல்லா... த || நெறியே .. சித் ||
ஸ்நிரிஸ்ஸ்ஸ்நிதமா; || கமபாபமகரிகமநிநி || ஸ்ா
தெல்-லா...ம் செய். || ப-தியே ... ... || —
(கொடுத்திட)

தொடுப்பு

; நிநீநிநீ நிஸ்நித || மாநிநீஸ்நீஸா ; ||
. மடுத்திடவும்... || -அடுத்தடுத்தே. ||
; நிஸா க்ரீ ஸா ; || ; ஸ்நிநீபாநீ ஸா ; ||
. மடுப்பதற்குள் || . ஆ ... சை ... ||
; நிக்ரரி ஸா ; ஸா || ; நிஸாநிதா மா ; ||
வைப்பதன்.றி || . வெறுப்பறியா . ||
; கமபஸ்நிதமாமா || கமபாநிப கமபமகரிகமநிநி || ஸா
வண் ண—நிறை || அ.மு ....தே......... || —

(கொடுத்திட)

முடிப்பு

; மமாமமாமா ; || ; கஸா ககா மா ; ||
. எடுத்தெடுத்துப் || . புகன்று லும் . ||
; கமபதநிதமா ; || மகபமகரி மககா ஸா ; ||
- உலவா ... த - || ஓ-ளி யே .... ||
; நிஸாகரீஸா ; || கரி ஸநிநீபா நிநீஸா ; ||
. என்-னு யிரே. || ... என் ... னுயிர்க்கு ||
; நிஸாமமாபமகரி || காகாமா ; ; ; ||
. இசைந்தபெரும்.. || துணையே ...... ||

(தொடுப்புபோல் பாடவும்)

; தடுத்திடவல் || லவர்இல்லாத் || ;தனிமுதற்பே; || ரரசே;; ||
; தாழ்மொழிஎன் || று.இகழாதே || ;தரித்துமகிழ்ந் || தருளே ||

(கொடுத்திட)

34. தனிப்பாடல்

ராகம் : லதாங்கி　　　　தாளம் : கண்டசாபு

(63-வது மேளகர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ்　　　　அவரோ : ஸ்நிதபமகரிஸ

காற்றாலே புவியாலே ககனமதனாலே
கனலாலே புனலாலே கதிராதியாலே ||

கூற்றாலே பிணியாலே கொலைக்கருவியாலே
கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்களாலே ||

வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டும்என்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தையருட் பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே ||

எடுப்பு

ஸா ; ஸ்நிதாபா || பமநிதபமகாரீ ||
காற்—றா— லே || பு-வி-யா லே ||
ரீகரிஸநிரீகா || பமநிததபபா ; ||
க-க-ன-மத || னா...லே - - ||
ககமரி காமாபா || தநிநிபதாநீஸ்ா ||
க-ன-லா-லே || பு-ன-லா-லே ||
ஸ்ா'ரீ ஸ்ரிக்ரிஸ்ா || ஸ்நிக்ரிஸ்நிதபதநி ||
கதி ரா ... தி || யா .. லே,..... ||

(காற்றாலே)

முடிப்பு

ஸ்ா தா நீ ; ஸ்ா || க்ரிஸ்ா நிஸ்ரிஸ்ரீ ||
கூற் ரு - லே || பி- ணியா.. லே ||
ஸ்ா ரீ க்ம்ப்ம்க்ரி || ஸ்நிக்ரிஸ்ா ; ; ||
கொலைக் கருவி || யா ... லே ... ||
தா ; க்ா ; ·ரீ || க்ரிஸ்நிதா ·நீ ரீ ||
கோ-ளா-லே || பி-ற வி யற்றுங் ||
தநி ரீக்ரி நிதநிதபம || ககமரிககமபதநி ||
கொடுஞ்-செயல் க - || ளா . லே ...... ||

(காற்றுலே)

முடிப்பு

; பாபா ; பா || பா ; பாத நிதபமா ||
வேற் று-லே || எஞ் ஞா — ன்றும் ||
காநீதநிஸ்நிதபமா || நிதபமகரிகா ; ||
அழி யா—தே - || வி-ளங்கும் ... ||
காநிதபதபமகரி || கதபமகரிகரிஸா ||
மெய் ய-ளிக்க || வேண் டு - மென்றேன் ||
; கமாரிகாமா || பமநிததபபா ; ||
விரைந்தளித்தான் || எனக்கே ... ||

(தொடுப்புபோல் பாடவும்)

ஏற்றுலே || இழிவெனநீர் || நினையாதீர் || உலகீர் ||
தா ; க்ா, ரிஸ்ா || க்ரிஸ்நி தாநீரீ ||
எந்தை அருட் || பெருஞ்ஜோ-தி ||
இவைறனேச்சார் || வீ ரே (காற்றுலே)

35. திருவருட் பேறு

ராகம் : காம்போதி　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

(28-வது மேளமான 'ஹரிகாம்போதி''யின் கிளை)

ஆரோ : ஸரிகமபதமகபதஸ்　　அவரோ : ஸ்நிதபமகரிஸநிபதஸ

அம்பலத்தே ஆடுகின்ற ஆரமுதே அரசே
ஆனந்த மாகடலே அறிவே என் அன்பே ||

உம்பர்கட்கே அன்றிஇந்த உலகர்கட்கும் அருள்வான்
ஒளிர்கின்ற ஒளியேமெய் யுணர்ந்தோர்தம் உறவே ||

எம்பலத்தே வாகி எனக்கு எழுமையும் நற்றுணையாய்
என்னுளத்தே விளங்குகின்ற என்னிறையே நினது
செம்பதத்தே மலர்விளங்கக் கண்டு கொண்டேன் எனது
சிறுமையெல்லாம் தீர்ந்தேமெய்ச் செல்வம் அடைந்தேனே ||

எடுப்பு

; பதாஸ்ஸ்ாரிஸ்நிதபநிதாபம்மா | கா, பாதரிஸ் | ரநிபதாஸ்ா, ||
அம்பலத்தே ஆ – டு கின் ற | - ஆரமுதே-அரசே ||
; மகாபதாஸ்ா, ஸ்ரீகாம்க் | ரீம்க்ாரிஸ்ஸ்ா ரிஸ்நிதபதபப || மக
ஆ—னந்த மா கடலே — | - அறிவே என் அன்...பே... || ...
(அம்பலத்தே)

தொடுப்பு

; ஸ்நீபதாஸா,ரிக்ாக்ா | ; ரிக்ாம்க்ா | ரீ, ம்க்ரிஸா ||
உம்பருக்கே யன்றி இந்த | - உலகருக்கும் அருள்வான் ||
தஸ்ாரீ, ரீஸ்ரிஸ்நிதபதா | ; தரிஸ்ாநிதபா | பாபதநிததப || மக
ஒளிர்கின்ற ஒ-ளி-யே-மெய் | - உணர்ந்தோ-ர்தம் உ-றவே || —
(அம்பலத்தே)

முடிப்பு

;தாஸ் நீத தா, தாபநீ | தாபதாபதா | ; தரிஸ்நிதபா ||
எம்பலத்தே வா-கி எனக் | கு எழுமையும், நற்றுணை-யாய் ||
; மபாத பமமகரிமா கரிஸஸா | ;, தபமகமா | பா, மதாபா ||
என் னுளத்தே - விளங்குகின்ற | ... என்னிறை யே, நினது ||

(தொடுப்புபோல் பாடவும்)

; செம்பதத்தேன் மலர் விளங்கக் | ; கண்டுகொண்டேன்-எனது ||
; சிறுமையெல்லாம் தீர்ந்தே மெய்ச் | செல்வம் அடைந்தேனே ||
(அம்பலத்தே)

36. அத்துவிதானந்தத்து அனுபவ விடையீடு

ராகம் : ஷண்முகப்ரியா தாளம் : கண்டசாபு

(56-வது மேளகர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

கரணமெல்லாம் கரைந்ததனிக் கரை காண்ப துளதோ
கரைகண்ட பொழுதெனையுங் கண்டு தெளிவேனே ||

அரணமெல்லாம் கடந்ததிரு வருள்வெளிநேர் படுமோ
அவ்வெளிக்குள் ஆனந்த அனுபவந்தான் உறுமோ ||

மரணமெல்லாம் தவிர்ந்துசிவ மயமாகி நிறைதல்
வாய்த்திடுமோ மூலமல வாதனையும் போமோ
சரணமெல்லாம்தரமன்றில் திருநடம் செய்பெருமான்
தனதுதிரு வுள்ளம்எதுவோ சற்றும் அறிந்திலனே ||

எடுப்பு

; ரிக்ாரி ஸ்ா ஸ்ா || ஸ்நிரிஸ்நிததநிதபபா ||
. கரணமெல்லாம் || க-ரைந்த-த- னி க். ||
; பதாநிதாநீ || ஸ்நிரீஸ்ா ; ; ||
. கரை காண்ப || து-ளதோ— ||
; பதாநிதாநீ || ஸ்ாநீ ஸ்ாரீரீ ||
. கரை கண்ட || பொழுதென்னையும் ||
; க்ம்ாக்ாரிஸ்ா || ஸ்நிரிஸ் நிதபமபத || நிஸ்
, கண்டு-தெளி || வே ... னே ...... || —

(கரணமெல்லாம்)

தொடுப்பு

; ரிக்ாரி 'ரீ ரீ || ;நிதாநிகாரீ; ||
. அர.ணமெல்லாம். || . கடந்த திரு . ||
; நிரீக்மாகா || ; க்ரிரிஸ் ரீ ; ||
. அருள்வெளிநேர்ப் || .ப-டு...மோ. ||
; பா, க் 'ரீக்ா || ஸ்ா க்ரிஸ்நிஸ்ா ||
. அவ்வெளிக்குள் || ஆ னந்...த ||
; நிரீஸ்தாதா || நிதபமகரிகமபத || நிஸ்
; அனுபவந்தான் || உ-று-மோ ... ... || ...

(கரணமெல்லாம்)

முடிப்பு

; நி நீ நி நீ நீ || ; தநீதபதாநீ ||
. மரணமெல்லாம் || . தவிர்ந்து சிவ ||
; பதா நிஸ்ா ஸ்ா || நிதஸ்நிதாபா ; ||
. ம ய மா — கி || நி றை-தல் — ||
; பா, பபா பா || ; பதபமக ரீஸா ||
. வாய்த்திடுமோ || . மூ...ல மல ||
; ரிஸாரிகாமா || பமநிததபபா ; ||
. வா - தனேயும் || போ ... மோ... ||

தொடுப்புபோல் பாடவும்

;சரணமெல்லாம் || ;தரமன்றில் || ;திருநடம்செய் || ;பெருமான்
; தனதுதிரு || வுள்ளம்எதுவோ || ;, சற்றுமறிந் || தி-லனே

(கரணமெல்லாம்)

37. உறுதி கூறல்

ராகம் : பஹுதாரி   தாளம் : ரூபகம்

(28-வது மேளமான "ஹரிகாம்போதி"யின் கிளை)

ஆரோ : ஸகமபதநிஸ்   அவரோ : ஸ்நிதநிபமகஸ

சாதிமதச் சமயமென்னும் சங்கடம் விட்டறியேன்
சாத்திரச் சேறுருடுகின்ற சஞ்சலம் விட்டறியேன் ||

ஆதியந்த நிலையறியேன் அலையறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவும் அறியேன் ||

நீதிநெறிநடந்தறியேன் ஜோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தை யறிவேனோ
ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்ன செய்வேன் ஏதும் அறிந்திலனே ||

எடுப்பு

1. ; நிஸ்ா நிபாமா ; || காபாமா காஸா ; ||
. சா-தி ம-தச் . || ச ம ய மென்னும் ||
; கஸா கமா ; பா || மபதநிபமகஸ கமபத || நிஸ்
. சங் கடம் . விட் || டறி யேன் . நா ... || .ன்

2. -ஸ்க்ம்க்ஸ்நிபாமா || கமபதநிஸ் நிபமகஸா ||
. சா...தி - ம தச் || ச.ம.ய . மென் னும் - ||
; மபாம கஸகாமா || பா மா பா ; பா ; ||
. சங் கடம் - விட் || ட றி யேன் நான் ||
; மகா மபாதாநிஸ் || நீபாத நிஸ்ா ஸ்ா ; ||
. சா-த்திர - ச்சே || ரு - டு - கின்ற — ||
ஸ்க்ம்ா க்ாஸ்ா ; ஸ்ா || ஸ்ஸ்நிபமமகஸ கமபத || நிஸ்
ச ஞ் ச லம்-விட் || ட - றி - யே ... ன ... || .ன்

(சாதிமதச்)

தொடுப்பு

ஸ்ா ; ஸ்ா ஸ்ஸ் நிநிபா ‖ ; தநீஸ் நீஸ்ா ; ‖
ஆ - தி யந் ... த ‖ . நிலையறியேன். ‖
; ஸ்நீஸ்ா, க்ாக்ா ‖ ம்ப்ம்க் ஸ்ா ; ; ; ‖
. அ லையாக்கடல் ‖ போ ... லே . . . ‖
ஸ்ாநீஸ்ாக்ாஸ்ா ; ‖ ஸ்ஸ்நிபதா, நிஸ்ா ; ‖
ஆ—னந்—த . ‖ பெ-ரும் போ-கம் - ‖
ஸ்க்ம்க் ஸ்நிபா மகமப ‖ தநிஸ்நிபம கஸகமபத ‖ நிஸ்
அ-மர்ந்தி-ட வு-ம் ‖ அ-றி-யே—ன் நா... ‖ -ன்

(சாதிமதச்)

முடிப்பு

; பா, ப பா பா ; ‖ பமகஸ காமாபா ; ‖
. நீ——தி நெறி ‖ ந-டந்த றி . யேன் ‖
தநிஸ்ா'நீபாமா ; ‖ மகபம மகஸா கா ; ‖
ஜோ...தி மணிப் ‖ பொ.து.வில் ... ‖
; கபாமகாஸா ; ‖ ; நிபாதநீ ஸா ஸா ‖
. நிருத்த மிடும். ‖ ஒருத்தர் தி ருக் ‖
; கஸாகா, காமா ‖ பா மா பா ; ; ; ‖
. கருத்தை-அ-றி ‖ வே - ஞே ...... ‖

தொடுப்புபோல் பாடவும்

ஏதிலர்சார் ‖ ; உலகினிடை ‖
ஸ்ாநீஸ்ாக்ாக்ா ; ‖ ம்ப்ம்க்ஸ்ா ; ; ; ; ‖
எங்ஙனம்-நான் ‖ பு-கு வேன் . . . ‖
யார்க்குரைப்பேன் ‖ என்ன செய்வேன் ‖
ஏ தும் அறிந் ‖ திலே னே-நான் ‖

(சாதிமதச்)

38. தனிப்பாடல்

ராகம் : ஹம்ஸானந்தி **தாளம் :** ரூபகம்

(53-வது மேளமான "கமனச்ரம"வின் கிளை)

ஆரோ : ஸரிகமதநிஸ் அவரோ : ஸ்நிதமகரிஸ

உழக்கறியீர் அளப்பதற்கோர் உளவறியீர் உலகீர்
ஊரறியீர் பேரறியீர் உண்மை ஒன்றும் அறியீர் ||

கிழக்கறியீர் மேற்கறியீர் அம்பலத்தே மாயைக்
கேதமற நடிக்கின்ற பாதம் அறிவீரோ ||

வழக்கறிவீர் சண்டையிட்டே வம்பளக்க அறிவீர்
வடிக்கும்முன்னே சோறெடுத்து வயிற்றிலடைக்க அறிவீர்
குழைக்கறியே பழக்கறியே கூட்டுவர்க்கக்கறியே
குழம்பே சாறே எனவும் கூற அறிவீரே ||

எடுப்பு

1. ; நிஸ்நிதா மாகா || ; மதம கரீஸா ; ||
. உழக் கறி யீர் . || .அளப்பதற்கோர். ||
; ஸரீ கரீ கா ; || காமத கமாக கமதநி || ஸ்ா
உள வறி யீர். || உல — கீர் .... || —

2. நிரிஸ்ா நிதா மாகா || ; கநீதமாகமகரி || ஸநி
உழ க் கறி யீர் || .அளப்பதற்கோர் || —
; ஸரீ கரீ கா ; || காமத கமாக கா ; ||
உள வறி யீர் || உல — கீர் .... ||
; கா, மதாநிதமா || ; தஸ்ா ஸ்நிக்ரி ரிஸ்ஸ்ா ; ||
ஊ ரறி யீ - ர் || . பே . ர — றி . யீ — ர் — ||
; ஸ்ாக்ரி ஸ்ா ; ஸ்ா || தநிஸ்நிதமகரிகமதநி || ஸ்ா
- உண்மை ஒன்றும் || அ-றி — யீர் ...... || —

(உழக்கறியீர்)

தொடுப்பு

; தநீத மாதா ; || ; நிஸ்ா ஸ்நிக்ரி ரிஸ்ஸ்ா ; ||
. கிழக்கறி யீர் . || . மேற் கறி.. யீ - ர் — — ||
; ரிக்ாரிஸ்ாக்ரிஸ்நி || ஸ்ரிக்ரி க்ா ; ; ; ||
. அம்ப ல த் தே... || மா ... யைக் ... ||
; க்மாக்ரீஸ்ா; || ஸ்நிக்ரிஸ்நிதமதா ; ||
கே-த-மற—|| ந—டிக் கின் — ற . ||
மதநிரிஸ்ாநிதா, மதா || ஸ்நிநித தமகரிகமதநி || ஸ்ா
பா — — — தம் அறி || வீ...ரோ ... ... || —

(உழக்கறியீர்)

முடிப்பு

; க கா க கா கா ; || ; கஸ்ாநிதா மாகா ||
வழக் க றி வீர் || சண்டையிட்டே— ||
; மதமகரீ ஸா ; || ஸாரீ கா ; ; ; ||
. வம் பளக்க . || அ றி வீர் ... ||
; மதாகமாதா ; || ; தநிநிமதாநீஸ்ா ||
வடிக்கு முன்னே || சோ...றெடுத்து ||
; நிரிஸ்ா நிதா மாகா || கமதமகரீ, ஸா ; ||
வ-யிற்றி ல டைக்க || அ-றி-வீர் ... ... ||

தொடுப்புபோல் பாடவும்

; குழைக்கறியே || ; பழக்கறியே ||
; கூட்டுவர்க்கக் || கறியே ; ; ; ||
; குழம்பே சா || றே எனவும் ||
; கூற அறி || வீ ரே ||

(உழக்கறியீர்)

39. முறையீடு

ராகம் : உதயரவிச்சந்திரிகா **தாளம் : ஆதி**

(22-வது மேளமான "கரகரப்ரியா"வின் கிளை)

ஆரோ : ஸகமபநிஸ் அவரோ : ஸ்நிபமகஸ

தத்துவம்என் வசமாகத் தான்செலுத்த அறியேன்
சாகாத கல்வி கற்கும் தரம்சிறிதும் அறியேன் ||

அத்தநிலை சத்தநிலை அறியேன் மெய் யறிவை
அறியேன்மெய் யறிந்தடங்கும் அறிஞரையும் அறியேன் ||

சுத்தசிவ சன்மார்க்கத் திருப்பொதுவினிடத்தே
தூயநடம் புரிகின்ற ஞாயம் அறிவேனோ
எத்துணையுங் குணமறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந்திலனே ||

எடுப்பு

; நீஸ்நிபா மபநி பம கா கா | கஸாஸகாமா | பாமாபா; ||
தத்துவம் என்வசமா—கத் | தான்.செலுத்த-அறியேன். ||
மபநிபமகாமாபநிபநிஸ்ாஸ்ா | ஸ்க்ாநிஸ்ாநிபஸ்நிபமகஸகம ||
சா—கா—தகல்—விகற்கும் | தரம் சிறிதும்-அ-றியே... ||
பா
ன் (தத்துவம்)

தொடுப்பு

; பநிப மகமா ; பாநிஸ்ஸா | பநீஸா ; , | ஸா,நிக்ாஸா ||
. அத்தநிலே . சுத்தநிலே | அறியேன் - மெய்யறிவை ||
ஸ்ம்ாக்ா, ஸா ஸ்நீபநீஸா | பஸாநிபாமா | பமகஸகமபநி || ஸக்
அறியேன்-மெய்யறிந்தடங்கும் | அறிஞுரையும்.அறியே - || ன்
(தத்துவம்)

முடிப்பு

; மாபபபாபமகமபாபா | பஸாநிபாபா | மகபமகா ; . ||
. சுத்தசிவ.சன்-மார்க்க | திருப்பொதுவி | னிடத்தே ||
; காமபபா - பமநிபமகஸா | ;, ஸகாமா | பகாமபாபா ||
. தூய நடம்-புரி-கின் — ற | .. ஞா— யம் அறிவே—னே ||
; பநிபமகமா . பநிபநிஸ்ாஸா | ; . நீஸ்ஸா | நிஸாக்நீஸா ||
எத்துணை-யும்குணம்அறியேன் | .,எங்ஙனம்.நான்.புகுவேன் ||
ஸ்ம்ாக்ஸாஸாஸ்நிபநிஸாஸா | பஸாநிபாமா | பமகஸ்கமபநி ||
யார்க்குரைப்பேன்-என்-செய்வேன் | ஏ-து மறிந்தி லேனே ... ||
ஸ்க்
—
(தத்துவம்)

40. உறுதி கூறல்

ராகம் : ஸிம்மேந்திர மத்யமம் | தாளம் : ஆதி

(57-வது மேளகர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ் | அவரோ : ஸ்நிதபமகரிஸ

ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட அறியீர்
அகங்காரப் பேய் பிடித்தீர் ஆடுதற்கே அறிவீர் ||

கூற்றுவருங்கால் அதனுக்கு ஏதுபுரிவீர் ஐயா
கூற்றுதைத்த சேவடியைப் போற்ற விரும்பீரே ||

வேற்றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற உலகீர்
வீணுலகக் கொடுவழக்கை விட்டுவிட்டு வம்மின்
சாற்றுவக்க எனதுதனித் தந்தை வருகின்ற
தருணமிது சத்தியம் சிற் சத்தியைச் சார்வதற்கே ||

எடுப்பு

; ரிக்ரி ஸ்ாஸ் நிரிஸ்ாநிதா நித | பம
. ஆற்று வெள்ளம். வ-ரு-வதன்-முன் | —
பதாநீத | ஸ்நிரீஸ்ா ; ||
அணைபோட அ-றி யீர் - ||
ஸ்ரீஸ் நீஸ்ா ரீ, ஸ்க்ாரீ |
அகங்கா-ரப் பேய் . பிடித்தீர் |
; ஸ்க்ரிஸ்ாஸ் | ரிஸ் நிதபமபத || நிஸ்
. ஆ-டுதற்கே அ-றி-வீ ... || -ர்

(ஆற்றுவெள்ளம்)

தொடுப்பு

1. ; ஸக்ரிஸ்நிஸ்ரீ, ஸ்க்ாரீ | ரீஸ்ரீக்ரீ | ஸ்ாதநீ, ஸ்ா ||
. கூற்றுவ-ருங்கால் அதனுக் | கு-எது புரி வீர் ஐ—யா ||

2. ; ஸ்க்ரிஸ்நிஸ்ரீ, ஸ்க்ாரீ | ரீக்ம்ாக்ரீ | ஸ்ாத நீ ஸ்ா ||
கூற்றுவருங்கால்அதனுக் | கு எது - புரி - வீர்-ஐ - யா ||
; ஸ்ரிக்ரீ ஸ்நீரிநிதநீரீ | ; நிரிநிதபா | நிதபமகமபத || நிஸ்
. கூற்றுதைத்த-சே...வடியை | .போற்றவிரும்பீ.. ரே... || —

(ஆற்று வெள்ளம்)

முடிப்பு

; பாதபாப பமாதபாதா | ; நிரீநிதா | பாதநிதா 'பா; ||
வேற்றுரைத்துவினைபெருக்கி | . மெலிகின்ற உல-கீர் - ||
; காநிதபா பமகா ரீ, ஸா | ; ஸாரி காம | பமநிததபபா ||
வீண்உலகக் கொடு வாழ்க்கை | . விட்டுவிட்டு வம்-மின் ||
; ஸ்க்ரிஸ்நீஸ்ாரிரீரிக்ா | ரீஸ்ரீக்ம்ா | க்க்ா ரீ, ஸ்ா ||
. சாற் றுவக்க எனது த | னித் தந்தை-வரு கின்ற ||
; ஸ்ரீக்ரீஸ்ா, தாநிரீ | ரீநிரிநிதா, ரிஸ்நிதபமபத || நிஸ்
. தருணமிது-சத்தியம் | சிற்சித்தியை-சார்வதற்கே. || ...

(ஆற்றுவெள்ளம்)

41. சற்குரு மணிமாலை

ராகம் : வாசஸ்பதி **தாளம் ; ஆதி**

(64-வது மேளகர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

மாற்றறியாத செழும்பசும் பொன்னே
மாணிக்கமே சுடர்வண்ணக் கொழுந்தே ||

கூற்றறியாத பெருந்தவருள்ளக்
கோயிலிருந்த குணப்பெருங்குன்றே ||

வேற்றறியாத சிற்றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறியாத என் சாற்றுங் களித்தாய்
தனிநடராஜவென் சற்குரு மணியே ||

எடுப்பு

; நிஸ்ாநிதா பா ; ; நித | பமபதபம கரீ காமா பா ; ||
. மாற்றறி யா——த | ... செழும் பசும்பொன்னே- ||
; மபாதாநிநிததா,நிஸ்ா | ; ஸ்ந்ரிஸ்நித | பாபமகமபத || நிஸ்
- மா-ணிக்கமே ... சுடர் | - வண்—ணக் கொழுந்தே— || ...
(மாற்றறியாத)

தொடுப்பு

1. ; , ஸ்ாஸ்ஸ்ாஸ்ா, நிரிஸ்நித | பாமபாதநீ | ஸ்ா ; ஸ்ா ; ||
. . கூற்றறி யா — த ... ... | பெருந்தவ ருள் - ளக், ||

2. ; ரிக்ாரிஸ் ரீஸ்ா, நிரிஸ்நித | பாமபாதநீ | ஸ்ா ; ரீ ; ||
. கூற்ற றி யா — த ...... | பெருந்தவருள் - ளக், ||
; க்ம்க்ரிஸ்ாஸ்நிரிஸ்நிதநீ | ; நிரிஸ்ாநிதா | பா,மகமபத || நிஸ்
. கோ...யி லி ருந்த — | . குணப்பெருங்குன் — றே— || —

(மாற்றறியாத)

முடிப்பு

; , தாநிததா ; பதநித | நீநிரிஸ்ாநிதா | பாதநிதபபா ; ||
. . வேற்றறியாத ... | . சிற்றம்பலக் | கனி-யே ||
; , காததபமகா ரிகரிஸா | ; காமா ; | பதநீதாபா ||
விச்சையில் வல்லவர் | . மெச்சும்-விருந்தே — ||

தொடுப்புபோல் பாடவும்

; , சாற்றறியாத | என்சாற்றுங் களித்தாய் ||
; தனிநடராஜவென் | ; , சற்குரு மணியே ||

(மாற்றறியாத)

42. உறுதி கூறல்

ராகம் : சஹானா — தாளம் : ரூபகம்

(28-வது மேளமான "ஹரிகாம்போதி"யின் கிளை)

ஆரோ : ஸரிகமபமதநிஸ் — அவரோ : ஸ்நிதபமகமரிகரிஸ

காடுவெட்டி நிலம்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற உலகீர் ||

கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீர் எங்கே
குடியிருப்பீர் ஐயோநீர் குறித்தறியீர் இங்கே ||

பாடுபட்டீர் பயன்அறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெல்லாம் போதும் இது பரமர்வரும் தருணம்
ஈடுகட்டி வருவீரேல் இன்பம்மிகப் பெறுவீர்
எண்மை உரைத்தேனலநான் உண்மை உரைத்தனனே ||

எடுப்பு

; ரீ, ரி ரீ ரீ ; || ; ரிரீகமாபா ; ||
. காடுவெட்டி. || . நிலம்திருத்தி - ||
; மபாதபமா கமகம || ரிககரிஸா ; ; ; ||
. காட்டெ-ருவும் — || போ ட்டு ... ||
; நிரீஸரீ ரிஸநீ || ; நிஸாததஸநிதபா ||
, கரும்பைவிட்டுக் || - கடு விரைத்—துக் ||
; நிஸா ரீ, ரீ ; || ரிகமபபமகம ரிகரிஸ || நிஸ
. களிக்கின்ற - || உ-ல கீ ... ... || ர்

(காடுவெட்டி)

தொடுப்பு

; , பாபதா பமமா ; || தா ; தநிஸ்ா ஸ்ா ; ||
. . கூடு விட்டு ப் || போ . யி ன பின் - ||
; தரீ ஸ்ரீ ரிஸ்நி || நீஸ்ாதாதஸ்நிதபா ||
. எது புரிவீர் || ... ... எங்—கே ||
; தரீஸ்ரீரிஸ்நி || நிஸ்ாத தஸ்நிதபா ; ||
. குடியிருப்பீர் || ஐ — யோ ... நீர் - ||
; ரிகாமபா பா ; || ; நிதபமகமரிகரிஸ || நிஸ
. குறித்தறியீர் . || . இங் ... கே ...... || ...

(காடுவெட்டி)

முடிப்பு

; , பாப பாபா ; || ; ரிரீ கமா பா ; ||
. . பாடுபட்டீர் || . ப யனறியீர் - ||
; மபாதப மாமா ; || காகா கமா ரீ , ; ||
. பாழ்க்கிறைத்துக் || கழித்தீ ர் ... ||
; , ரீபமதபமமா ; || கமாரி ரிககரி ஸாஸா ||
. . பட்டதெல்லாம். || போ - தும் ... இ து ||
; நிஸாரிரீரீ ; || ரீநிதபா ; ; ; ||
. பரமர் வரும். || தருணம் ...... ||

தொடுப்புபோல் பாடவும்

;, ஈடுகட்டி || வருவீரேல் || ; இன்பம்மிகப் || பெறுவீர் ||
; எண்மைஉரைத் || தேனலநான் || ;உண்மைஉரைத்;தனனே ||

(காடுவெட்டி)

43. சிவபுண்ணியத் தோற்றம்

ராகம் : கௌரிமனோஹரி　　　　தாளம் : ஆதி

(23-வது மேளகர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ்　　　　அவரோ : ஸ்நிதபமகரிஸ

கடவுள் நீறிடாக் கடையரைக் கண்காள்
கனவிலேனும் நீர் காணுதல் ஒழிக ||

அடவுண் மாசுதீர்த் தருள்திரு நீற்றை
அணியும் தொண்டரை அன்புடன் காண்க ||

தடவும் இன்னிசை வீணைகேட்டரக்கன்
தனக்கு வாளொடு நாள் கொடுத்தவனை
நடவு மால்விடை ஒற்றியூருடைய
நாதன் தன்னைநான் நண்ணுதற் பொருட்டே ||

எடுப்பு

; தநீஸ்ா, ஸ்நிதா பாமா | ; மபா மகரீ | கா; மா; ||
. கடவுள். நீ—றி டாக் | . கடையரைக் கண். காள். ||
; ரிகாமபா; தாதநிஸ்நி | தபாஸ்ாதநீ | ஸ்ரிக்ரிஸ்நிதப || மப
, கன விலே-னும் நீ ... | -ர்- கா ணுதலொழிக... || —

(கடவுள்)

தொடுப்பு

; க்ரீஸ்நிஸ் ரீ ; ; ரீ | ; ஸ்ரீக்ம்ரா | 'ரிக்ரா ரீ. ஸ்ரா ||
. அடவு-ண் மா—சு | . தீர்த்தருள் திரு நீற்றை ||
; ஸ்ரீக்க்ரிஸ்நிதபதா ; | ;ஸ்ரிஸ்நிதபா | ஸ்நிதபமகரிக || மப
. அணியும்தொண்டரை. | . அன்—புடன் கா-ண்க —— || —
(கடவுள்)

முடிப்பு

; பபாபபா; பாதா ; | ; தரிஸ்நிதபா | மதபாமகரிகா ||
. தடவும் இன்னிசை . | . வீ—ணை கேட் - டரக்கன் ||
; ரிகாமா, ரீகாரீஸா | ; ரிகமாபா | தநீஸ்நிதாபா ||
. தனக்கு வா-ளொடு | . நா ... ள் கொடுத்த வ னை ||
; க்ரிஸ்நிஸ்ரா ரீ; க்ரரீ | ; ரீக்ம்ரா | ரீக்ராக்ரிரீ ||
. ந-ட-வு-மால்விடை | . . ஒற்றியூர் உடைய . ||
; ஸ்ரிக்ராரீஸ்நிதபதா ; | ; ஸ்ரிஸ்நிதபா | ஸ்நிதபமகரிக || மப
. நா—தன் தன்னை நான் | . நண்—ணுதற் பொருட்டே... || ...
(கடவுள்)

44. பரிவு கூர்தல்

ராகம் : ஸரஸ்வதி தாளம் : ஆதி

(64 வது மேளமான "வாசஸ்பதி"யின் கிளை)

ஆரோ : ஸரிமபதஸ் அவரோ : ஸ்நிதபமரிஸ

வானைநோக்கி மண்வழி நடப்பவன்போல்
வயங்கும்நின்னருள் வழியிடை நடப்பான் ||

ஊனை நோக்கினேன் ஆயினும் அடியேன்
உய்யும் வண்ணம்நீ உவந்தருள் புரிவாய் ||

மானை நோக்கிய நோக்குடை மலையாள்
மகிழமன்றிடை மாநடம் புரிவோய்
தேனைநோக்கிய கொன்றையஞ்சடையோய்
திகழும் ஒற்றியூர்த் தியாக நாயகனே ||

எடுப்பு

; பதஸ்ாஸ்த்ரிஸ்நீதாபா | ; பமா ரிஸா | ரீமா பா ; ||
. வா — னை நோக்கிமண் | . வழி நடப் பவன் போல். ||
; பதபம ரிஸாரிஸநிதஸாஸா | ; ரிமாபதா |
. வயங் கும் — நின்—னருள் | . வழியிடை |
பதஸ்த்ரிஸ்நித || பம
நடப்பா ... || -ன் (வானை)

தொடுப்பு

; ரிஸ்நீதா ஸ்ா ; ரீரீ | ; ரிம்ாரிஸ்ா | ; நிதாஸ்ா, ||
. ஊ...னே நோ-க்கினேன் | . ஆயினும் . அடி யேன், ||
; , தாரிஸ்ாரிஸ்நீதாபதஸ்ா | ; தரிஸ்நிதபா;நிதபமரிஸ || ரிம
. . உய்யும் வண்-ணம் நீ ... | . உவந்தருள் . பு-ரி வா || -ய்
(வானை)

முடிப்பு

; நிதபமபா தா ; நீதா | ; பதாஸ்ஸ்ா | தாநீநிததா ||
. மா —னை நோ-க்கிய | . நோக்குடை | மலையாள் ||
; பதா நிதா பதபமரீஸா | ; ரிமாபதா | ; நிதாபா, ||
. மகிழ்ந்திட மன்—றிடை | . மா-நடம் . புரிவோய். ||

தொடுப்புபோல் பாடவும்

; தேனை நோக்கிய | ; கொன்றையஞ் சடையோய் ||
; தரீரிஸ்நிதா, பாதஸ்ா | ;தரிஸ்ாநீதா | பதநிதபமரிஸ || ரிம
. திக ழும்......ஒற்றியூர் | . த்யா — க நா ... ய-க- || னே .
(வானை)

45. அவலத்தழுங்கல்

ராகம் : சாருகேசி　　　　　　　　　　　தாளம் : ஆதி

(26 வது மேளகர்த்தா)

ஆரோ : ஸரிகமபதநிஸ்　　　　　　　　அவரோ : ஸ்நிதபமகரிஸ

நிலையில்லா உலகியல் படும்மனத்தை
நிறுத்திலேன் ஒரு நியமும் அறியேன் ||

விலையில்லா மணியே உன்னை வாழ்த்தி
வீட்டுநன்னெறிக் கூட்டென விளம்பேன் ||

அலையில் ஆழ்ந்தெழும் துரும்பென அலைந்தேன்
அற்பனேன் திரு வருள் அடைவேனே
சிலையிலார் அழற்கணை தொடுத்தவனே
திகழும் ஒற்றியூர்த் தியாக மாமணியே ||

எடுப்பு

ஸ்நீரிஸ்நிதபா, மபாமகா | ; கரீகமா | பா ; ; ; ||
நிலை யில் - லா—உலகியல் | . படும்மனத் | தை ... ||
; , கமாபாதா <u>ஸ்நிநிததா</u>நிஸா | ;<u>ஸ்க்</u>ரீஸ்நீ | தபமகமபதநி ||
. . நிறுத்திலே — ——— ன் ஒரு | . நி-யமமும் | அ-றி யேன் ||
(நிலையில்லா)

தொடுப்பு

மதபாமகாமா ; பதாநீ, | ; ஸ்ா ; ஸ்ா | ஸ்ந்ரீஸ்ா ; ||
வி லை-யில்லா - மணியே. | . உன் - னை வாழ்த்தி - ||
; ஸ்க்ரீஸ்ா ,ஸ்ஸ்நி தா நிஸ்ா | ;ந்ரிஸ்நிதபம | கரிகமபதநிஸ் ||
. வீ-ட்டு நன் ... னெறி | .கூ—ட்டென | வி-ளம்பே ன் ||
(நிலையில்லா)

முடிப்பு

; பபாபா ; , தநீதபா | ; மபாமகா | ரீகாமா ; ||
. அலையில்— ஆழ்ந்தெழும் | . துரும்பென | அலைந்தேன்' ||
; , மாபமகா ; , மகரிஸஸா | ; ஸரீகமா | பதபதமபா ; ||
. . அற்பனேன்—திரு-வருள் | . அடைவே னே ... . ||
; மதபா மகமபா' தநிதநீ | ; நிஸ்ா தநீ | ஸ்ந்ரீஸ்ா ; ||
. சி லை யி லா-ர்- அ ழல் | . கணை தொடு | த்த-வனே. ||
; ஸ்க்ரிஸ்ா ; ; நிதநிஸ்ா | ; , ர்ஸ்நிதா | மா, பதாநீ ||
. தி க-ழும் . . ஒற்றியூர் | . . த்யா க மா-மணியே ||
(நிலையில்லா)

46. உண்மை கூறல்

இராகம் : பைரவி தாளம் : ஆதி

(20-வது மேளமான "நடபைரவி"யின் கிளை)

ஆரோ : ஸகரிகமபதநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

தடுத்தென்னை ஆட்கொண்ட தந்தையரே என்
தனிப்பெருந்தலைவரே சபைநடத்தவரே ||

தொடுத்தொன்று சொல்கிலேன் சொப்பனத்தேனும்
தூயநும் திருவருள் நேயம் விட்டறியேன் ||

விடுத்திடில் என்னைநீர் விடுப்பனென் உயிரை
வெருவுளக் கருத்தெல்லாம் திருவுள்ளத் தறிவீர்
அடுத்தவப் பாயில் படுக்கவும் மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீர் ஆணைநும்மீதே ||

எடுப்பு

1. க்ரீஸா, ஸ்ா ஸ்ா நிரி ஸ்நிதப |
தடுத்தென்னை ஆட்கொண்ட- |
; மநீதபா | தபமக ரீஸா ||
தந்தையரே .... என் ||
; ஸகாரிகா | ; மபாதபா |
தனிப்பெரும் த லைவ ரே |
; பாபநிதபதம | பாபா மபதநி || ஸ்ா
ச பை நடத் | த-வ- ரே...... || —

2. ; ரிம்க்ரிஸ் ஸா ஸ்நிரிஸ்க்ரிஸ்நி | தப
த-டுத்தென்னை ஆ-ட்கொண் | ட
; மநீதபா | மபதப மக ரீஸா ||
தந்தையரே .... என் ||
; ஸகாரிகா;மபாதபா | ;பாபநிதபதம | பாபாமபதநி || ஸா
தனிப்பெரும்தலைவரே | .சபை நடத் த வ ரே ... || —
(தடுத்தென்னை)

தொடுப்பு

; பதநி பதம பா, பத நீத |
தொடுத்தொன்றும் சொல்கிலே-ன் |
; , தநிஸ்ஸா | ஸா, நி ரீ ஸா ||
சொப் ப னத் தே — — னும் ||
; பகாரிஸா ;ஸ்ரிஸ்நிதபா |
தூ—ய நும்-தி-ரு—வருள் |
; மநீதபா | மகரிக மபதநி || ஸா
நேயம் விட்ட-றி யே ...... || ன் (தடுத்தென்னை)

முடிப்பு

; பதாபபா பாதாபா; | ; மபாதபா | பாதாதபபம || மா
விடுத்திடில்-என்னை நீர் | விடுப்பனென் உயிரை ...... || —
தபாமமா ரீகம ரீகஸ | ; ஸகாரிகா | மபதாபா ; ||
வெருஉள்ளக்கருத்தெல்லாம் | . திருவுள்ளத் த-றி-வீர். ||

(தொடுப்புபோல் பாடவும்)

; அடுத்து அவப்பாயில் | ; படுக்கவும் மாட்டேன் ||
; அருட்பெருஞ்ஜோதியீர் | ; ஆணை நும் மீதே ||
(தடுத்தென்னை)

47. அருள்விளக்க மாலை

ராகம் : பிம்ப்ளாஸ் **தாளம் : கண்டசாப்பு**

(22-வது மேளமான "கரஹரப்ரியா"வின் கிளை)

ஆரோ : ஸகமபநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கம்நின்று கேட்டாலும் பரிந்து உணர்ந்தாலும் ||

ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே ||

வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்மையறி வானந்தம் விளங்கும் அருள்அமுதே
தீர்த்தாவென் றன்பரெலாம் தொழப்பொதுவில் நடிக்கும்
தெய்வநடத்தரசேயென் சிறுமொழி யேற்றருளே ||

எடுப்பு

; ஸ்ா, ஸ்ா, ரீ || நீ நீ நிதஸ்நிதப ||
. பார்த்தாலும் || நினைத்தா—லும் ||
; கமாபஸ்நிதப || ; மககாககரிஸ ||
. படித்தா லும் || . ப-டிக் கப் ... ||
; ஸாகரிநிஸா || கா; மா பா பா ||
. பக்கம்நின்று || கே . ட் டா—லும் ||
; பநீஸ்ரீஸ்நி || நிநிதபமநிபமகம || பநி
. பரிந்துள்உணர்ந் || தா... லும்...... || ...

(பார்த்தாலும்)

(தொடுப்பு)

; நீ, நீ, நீ || ; நிநீ நித ஸ்நிதபா ||

, ஈர்த்தாலும் || . பிடித்தா — லும் ||

; நிபநிபமகமா || பா ; நீ ஸ்ா ||

.கட்டி-யணைத் || தா . லும் . . ||

; , நீஸ்க்ாக்ா || ; ஸ்ாரீஸநிரிஸ்ஸ்ா ||

, இத்தனைக்கும் || தித்திக்கும் ...... ||

; பஸ்ாநிதாபா || , நிபமகரிநிஸகம || பநி

. இனித்தசுவைக் || . கரும்பே ... ... || ...

(பார்த்தாலும்)

முடிப்பு

; மா, மா, மா || கா ஸா கா மா மா ||

. வேர்த்தா-வி || மயங் கா ———து ||

; கமாபநிபபம || கா ரீ ஸா ; ; ||

கனிந்தந-றுங் || க னி யே . . ||

; ஸகாரி நீஸா || காமா மா ; மா ||

. மெய்மையறி || வா - னந்தம் ||

; மநீபமகமா || பாநீதாபா ; ||

. விளக்கும் அரு || ளமுதே — — ||

; நீ, நீ, நீ || நீ; நிதஸ்நிதப ||

. நீர்த்தாவென் || றன்ப—ரெலாம் ||

; பநீபமகமா || ·பாபா நீ ஸ்ா ; ||

. தொழப்பொதுவில் || நடிக்கும்... ||

; , நீஸ்க்ாக்ா || ஸ்க்ம்கக்ரிஸ்நிஸ்ா ||

. தெய்வநடத் || த—ர—சே...என் ||

; பஸ்ாநிதாபா || மநிபமகரிநிஸகம || பநி

. சிறுமொழி ஏற் || ற-ரு-ளே ... ... || —

(பார்த்தாலும்)

48. சற்குருமணிமாலை

ராகம் : பவப்ரியா தாளம் : ஆதி

(44-வது மேளகர்த்தா ராகம்)

ஆரோ : ஸரிகமபதநிஸ் அவரோ : ஸ்நிதபமகரிஸ

நன்மார்க்கத் தவருள்ளம் நண்ணியவரமே
நடுவெளி நடுநின்று நடம்செயும் பரமே ||

துன்மார்க்கவாதிகள் பெறற்கரும்நிலையே
சுத்தசிவானந்தப் புத்தமுத உவப்பே ||

என்மார்க்கம் எனக்களித்து என்னையும் மேலேற்றி
இறவாத பெருநலம் ஈந்த மெய்ப் பொருளே
சன்மார்க்க சங்கத்தார் தழுவிய பதியே
தனிநடராஜாஎன் சற்குரு மணியே ||

எடுப்பு

ஸ்ா, ஸ்ா, நீதாபாதநிதபமா	; பதபமகரீ	காமாபா ;	|
நன்மார்க்கத்தவ-ருள்ளம்	. நண்ணிய வர மே		||
; பதமாபதா நிநீ ஸ்ா, ஸ்ா	;ரிக்ாரிஸ்ா	ரிரிஸ்நிதபதநி	||
. நடுவெளி நடுநின் . று	. நடம் செயும் ப— ர— மே...		||

(நன்மார்க்க)

தொடப்பு

1.	நீஸ்நிதபாதா ஸ்நிநீ ஸ்ா ஸ்ா	;நிஸ்ாிஸ்ா	ாிஸ்நிதநீஸ்ா,	‖
	துன்—மார்க்க—வா—தி கள்	. பெறற்கரும்-நி லே யே	.	‖
2.	நீஸ்நிதபாதா ஸ்நிநீஸ்ா ஸ்ா	; ஸ்ரீஸ்நீ	, ஸ்ரீக்ா;	‖
	துன்—மார்க்க வா — தி கள்	. பெறற்கரும் நிலேயே-		‖
	; , க்ாப்ம்ாக்ா , ாிக்ாிஸ்ா	; , ஸ்ாநிதா	பதமபதாநீ	‖
	சுத்த சி வா—னந்—த	. . புத்தமுத — உவப்பே		‖

(நன்மார்க்க)

முடிப்பு

பா, பா மா கரீ கமாபா	; பதாநிஸ்ா	நிதஸ்நிதா, பா	‖
என்மார்க்க மெனக்களித்து	. என்னேயும் மே — — லேற்றி		‖
கதாதபமகா ; ாிகாாிஸா	; கமமாிகா	பமாபதாபா	‖
இற வா—த—பெருநலம்	. ஈந்—த மெய்ப்பொருளே		‖

அனுபல்லவிபோல் பாடவும்

சன்மார்க்க சங்கத்தார்	; தழுவிய பதியே	‖
; தனிநடராஜா என்	- சற்குரு மணியே	‖

(நன்மார்க்க)

49. கொடைமடப்புகழ்ச்சி

ராகம் : தேவமனோஹரி தாளம் : ஆதி

(22-வது மேளமான "கரஹரப்ரியா"வின் கிளை)

ஆரோ : ஸரிமபதநிஸ் அவரோ : ஸ்நிதநிபமரிஸ

வெள்ளிமாமலை வீடென வுடையீர்
விளங்கும் பொன்மலை வில்லெனக் கொண்டீர் ||

வள்ளியீரென உம்மை வந்தடைந்தால்
வாய்திறந்தொரு வார்த்தையும் சொல்லீர் ||

எள்ளில் எண்ணெய்போல் எங்கணும் நின்றீர்
ஏழையேன்குறை ஏனறியீரோ
ஒள்ளியீர் உம்மை அன்றி ஒன்றறியேன்
ஓங்கும்சீர் ஒற்றி ஊருடையீரே ||

எடுப்பு

